7

செ.வெ. எண்: 390 நாள்: 06.07.2012

# செய்தி வெளியீடு

பள்ளிக் கல்வி பயிலும் வயதில் உள்ள அனைத்து குழந்தைகளும், இடைநிற்றல் இன்றி கல்வி கற்பதற்கான பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

இந்த வகையில், மாணவ, மாணவியர் தாங்கள் வசிக்கும் இருப்பிடத்திற்கு அருகிலேயே மேல்நிலைக்கல்வி பயில வழிவகை ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்கெனவே சென்ற ஆண்டு 65 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், ஆக மொத்தம் 875 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டன.

அந்த வகையில், நடப்பு ஆண்டிலும் 100 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

பள்ளிகளை தரம் உயர்த்துவதினால் மட்டும் தரமான கல்வியை அளிக்க முடியாது. தேவைக்கேற்ப ஆசிரியர்கள் எண்ணிக்கையும் உயர்த்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் ஆகிய பாடங்களுக்கென, 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்களை தோற்றுவிக்கவும், 100 உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 40 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

பள்ளிக்கல்வித் துறையில் அரசு எடுக்கும் இந்த நடவடிக்கைகள், ஊரகப் பகுதிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் எந்தவிதச் சிரமமுமின்றி கல்வி பயில வழி வகுப்பதோடு தகுதியானோர் ஆசிரியர் பணி பெறவும் ஏதுவாக அமையும்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள் : 6.7.2012